# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.201/2024

### அ.சா. 5 (LW 5)

| பெயர் | திருமதி. முருகேஸ்வரி | தொழில் | |
|---|---|---|---|
| க பெயர் | சண்முகவேல் | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூகா | | தேதி | 02.04.2026 |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 முதல் 9 எதிரிகள் ஆஜர். 10 ,11வது எதிரிகள் VC மூலம் ஆஜர்படுத்தப்பட்டார்கள்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது பாறைப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். இதற்கு முன்பு முத்தழகுபட்டியில் குடியிருந்து மிட்டாய் கடை வைத்து வேலுமணி என்ற பெயரில் நடத்தி வந்தேன். எனக்கு 4 பிள்ளைகள் இருந்தார்கள். சக்திவேல், தட்சணாமூர்த்தி, கீதாலெட்சுமி, கவியரசி ஆவார்கள். அமல்ராஜ் மகன் அலெக்ஸ்ராஜ் என் மகள் கீதா லெட்சுமியை கூட்டிச் சென்றதால் எங்களுக்கும் அலெக்ஸ் ராஜ் குடும்பத்திற்கும் மனவருத்தம் வந்தது. என்னைக்காயிருந்தாலும் உன் மகன்களை வெட்டிக் கொல்லாமல் விட மாட்டேன் என்று வீட்டிற்கு வந்து அலெக்ஸ்ராஜ் குடும்பத்தார் சத்தம் போட்டு விட்டு சென்றார்கள். இறந்து போன அருளானந்த பாபு என் மகன்களின் நண்பர் ஆவார். என் மகன்களை அலெக்ஸ்ராஜ் அவரது நண்பர்களுடன் வெட்டிக் கொன்று விட்டதால் எங்கள் குடும்ப பாதுகாப்பிற்காக இறந்து போன அருளானந்த பாபு எங்கள் வீட்டிற்கு வந்து அவ்வப்போது பார்த்து விட்டு செல்வார். சாப்பாடு, மாத்திரை போன்றவைகளை தேவைப்படும் போது கொடுத்து வந்தார். 07.08.2023 அன்று மதியம் 03.15மணி அளவில் கார்த்திக் என்னிடம் வந்து உங்கள் வீட்டில் இருக்கும் அருளானந்த பாபுவை கன்னிமார் கோவில் தெப்பத்திற்கு பின்னாடி உள்ள காலி புறம்போக்கு இடத்தில் சுமார் 10 நபர்கள் துரத்திக் கொண்டு சென்றதாக தகவல் சொன்னார். நான் உடனே அருளானந்த பாபுவின் பெற்றோரிடம் போன் மூலமாக தகவல் சொன்னேன். நான் அங்கு சென்று பார்த்த போது இறந்த நபரின் பெற்றோர்கள் ஒற்றை பனைமரம் வழியாக வந்தார்கள். உனக்கு உதவி செய்ய வந்ததால்தான் என் மகனை வெட்டிக் கொன்று விட்டார்கள் என சொல்லி இறந்த அருளானந்த பாபுவின் பெற்றோர் சொல்லி அழுதார்கள். ஆஜர் எதிரிகளையும் VC மூலம் ஆஜரான எதிரிகளையும் தெரியும். ஆஜர் எதிரிகள் தான் அருளானந்த பாபுவை கொன்று விட்டதாக இறந்த அருளானந்த பாபுவின் பெற்றோர்கள் கூறினார்கள். நான் போய்

பார்க்கும் போது அருளானந்தபாபுவின் கை, கால் மற்றும் தலையில் வெட்டுப்பட்டு மூளை வெளியே வந்து இருந்தது. அங்கிருந்த போலிசார் ஆம்புலன்ஸ் மூலமாக அருளானந்தத்தின் பிரேதத்தை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் 164 வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்தை நான் நீதித்துறை நடுவர் முன்பாக போட்டேன். அந்த கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ.4**. ஆக குறியீடு செய்யப்படுகிறது. (10 எண்ணிக்கை)

**<u>1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலிசார் விசாரணையில் அமல்ராஜ் மகன் அலெக்ஸ்ராஜ் என் மகள் கீதா லெட்சுமியை கூட்டிச் சென்றதால் எங்களுக்கும் அலெக்ஸ் ராஜ் குடும்பத்திற்கும் மனவருத்தம் வந்தது என்றும், என்னைக்காயிருந்தாலும் உன் மகன்களை வெட்டிக் கொல்லாமல் விட மாட்டேன் என்று வீட்டிற்கு வந்து அலெக்ஸ்ராஜ் குடும்பத்தார் சத்தம் போட்டு விட்டு சென்றார்கள் என்றும் இறந்து போன அருளானந்த பாபு என் மகன்களின் நண்பர் ஆவார் என்றும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். 07.08.2023 அன்று மதியம் 03.15 மணி அளவில் கார்த்திக் என்னிடம் வந்து தகவல் சொன்னார் என்ற விவத்தை போலிசார் விசாரிக்கும் போது சொன்னேனா என்றால் சொன்னேன். 10 நபர்கள் அருளானந்த பாபுவை விரட்டிச் சென்றதாக கார்த்திக் சொன்ன விவரத்தை போலிசார் விசாரிக்கும் போது சொன்னேனா என்றால் சொன்னேன். எனக்கு சம்பவத்தன்று கார்த்திக் அருளானந்த பாபுவை 10 நபர்கள் விரட்டிச் சென்றதாக என்னிடம் தகவல் சொன்னதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அதன்பின்பு நான் அருளானந்தபாபுவின் பெற்றோருக்கு தகவல் சொன்னேன் என சொல்வது பொய் என்றால் சரியல்ல. அருளானந்தபாபு என் மகன்கள் இறந்த பின்பு என் வீட்டிற்கு வந்து எங்களுக்கு உதவி செய்தார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. அருளானந்தபாபு இறந்ததை சம்மந்தப்படுத்தி ஏற்கனவே எனக்கு எதிரிகள் மீது இருந்த முன்விரோதம் காரணமாக எதிரிகள் மீது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அருளானந்தபாபுவின் பெற்றோர்கள் என்னிடம் யார், யார் அவரை விரட்டி சென்றார்கள் என பெயரை சொல்லி என்னிடம் தகவல் சொன்னார்கள் என போலிசார் சொல்லிக் கொடுத்து பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவரின் பெற்றோர்கள்தான் என்னிடம் சொன்னார்கள்.

**<u>2 முதல் 11 எதிரிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணையை அனுசரித்து ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.</u>**

**<u>மறு விசாரணை இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.04.02 21:57:52 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.